உ

வேலுமயிலும் துணை.

கதிரேசன்பேரில்

ஆனந்தக்களி

இதனுள்

கதிர்காமத்துயேசல், கதிர்காமக்கும்மி,

மங்களமும் அடங்கியிருக்கின்றன.

இவை.

நெல்லாத்தூர்.

P. இராஜகோபால் நாயுடவர்கள்

பார்வையிடப்பட்டு.

சென்னை-சூளை.

பு. முனிசாமி நாயுடு

அண்டு பிரதர் அவர்களது,

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1927. [அணா-4.

நெ. 6-தருமராஜாகோவில் தெருவு,

சூளை-சென்னை.

முக்கியகவனிப்பு.

கீழ்கண்ட புஸ்தகமும் இன்னும் இதரபுஸ்தகங்கள் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதினால் வீ. பீ. தபால் [illegible]வழியமாய் அனுப்பப்படும் தபால் சார்ஜ் பிரத்யேகம்.

	ரூ	அ.
[illegible]ராஜால		
[illegible]சர்ந்தது	1	0
[illegible]ம்	1	0
[illegible]	1	0
[illegible]	1	0
[illegible]	1	8
[illegible]	0	6
[illegible]	0	6
ரூபாவதி அல்[illegible]து சிதம்பர சாமியார்	12	0
ஸ்ரீகிருஷ்ண[illegible]ஷ்ட கலியாணம்	1	0
மாதர் மனுதர்[illegible]ம நூல்	0	6
ஆனந்த[illegible]ணுகரி	0	10
சிவவிஷ்[illegible]ணுக்ஷேத்திரவிளக்கம்	1	4
நாலாயிர திவ்யபிரபந்ததிரட்டு	0	8
வண்ணத்திரட்டு இலக்கணத்துடன்	0	8
தலைவாங்கி அபூர்வசிந்தாமணி	1	0
ஆங்கிலபோதகன்	2	0
சம்பூர்ணராமநாடகம் 12-பாகம்	2	0
நாஞ்ஜீவவாத கட்டளை	0	8
வான்மீகர் ஆருட சாஸ்திரம்	0	4
கட்டளைக்கொத்து	1	0
மேற்படி கிளேஸ்	1	8
போகமுனிவர் அருளிச்செய்த சப்தகாண்டம்-7000-பாடல்	4	0
பகவத்கீதை வசனம்	1	8
திருக்குறல்-மூலம்	0	6
கந்தப்புராணச்சுருக்கம்	0	8
பெரியபுராணவசனம்	1	4
திருவிளையாடல்புராணவசனம்	1	4
கோயிற்புராண வுரை	1	4
சேது புராணம்	2	8
வில்லிபுத்தூரார் பாரதம்	3	8

	ரூ.	அ
வைத்திய மூலிகைஅகராதி	1	0
வைத்தியசாரசங்கிரகம்	1	4
அராபிக்கதை	2	8
விக்கிரமாதித்தன் கதை திக்கு பெரியயெழுத்து	2	8
திருப்போரூர் சன்னதிமுறை	0	12
மேற்படி கிளேஸ்	1	0
திருத்தணிகை சன்னதிமுறை	0	12
ஆதிபர்வம் தனி	1	8
ஆத்மபுராணவசனம்	8	0
ஆனந்தராமாயணம்	6	0
கம்பராமாயணவசனம் 2-வாலியம் படத்துடன்	8	0
ஷை மட்டம் ஒரேகட்டடம்	14	0
கெருடபுராண வசனம்	0	2
சா[illegible]ந்தகணேசபுராணம்	0	6
சிவராத்திரிபுராணவசனம்	0	6
ஸ்ரீகாளஅத்திபுராண வசனம்	0	0
தேவிபாகவதவசனம்	9	8
அனுமந்தபராக்கிரமம்	1	8
சிவபராக்கிரமம்	1	6
சுப்பிரமணிய பராக்கிரமம்	2	0
தேவிபராக்கிரமம்	1	4
ஸ்ரீராமபராக்கிரமம்	0	4
நாலடியார்	1	6
மஸ்தான்சாயபு பாடல்	1	8
வன்னியபுராணம்மூலம்-உரை	1	8
விநோதமஞ்சரி ரப்பு	1	8
விநாயகபுராணவசனம்	5	0
விராடபர்வம் தனி	1	8
திருவாய்மொழி	2	4
திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் பேரில் இலிங்கப்பதிகம்	0	1
திருவரங்கச்சன்னதிமுறை	0	8

எமது விலாசம்:—

P. M. N. & BROTHER
பு. இராஜு நாயுடு அவர்களது,
சங்கநிதி விளக்கம் பிரஸ்,
சூளை மதராஸ்.

உ

கடவுள் துணை.



கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு

காப்பு.

குரு விருத்தம்.

வெத்திமாமயில் வேலர்மீதினிற்
சித்தியானந்தச் சிந்துபுகழ்ந்திட
சத்திவாலே யருள்திருமாமத
அத்திமாமுக னைங்கரன்காப்பதாம்.

ஆனந்தக்களிப்பு.

தானந் தனா தந்த னானா—தந்த
தானா தனா தந்த னாதந்த னானா.

சீர்மேவுங்கதிர்காமம் வாழும்-வள்ளி
தெய்வானைமணவாளன் மீதிலென்னாளும் ௧

பார்புகழவே துதி சிறக்க-எங்கள்
பாரமதையானைமுகன் றன்னருள்பெருக்க ௨

தானடக்கடனமயி லேறுஞ்-சுவாமி
சரஹணபவானந்தன் மீதிலருள்சேரும் ௩

ஆனந்தக்களிப்பிதனைப் பாட-கையிலே
யானிமலரடியைகா ணனுதினந்தேட ௪

சதுர்முகன்தேவி நயந்தாவே-யிந்தத்
தாரணியிலுகந்தகவி வாணர்ஜெயம்பெறவே ௫

கதிர்காமமாநகர் சிறப்பாம்-எங்கள்
கண்ணாருளால்சொன்ன ஆனந்தக்களிப்பாம் ௬

திசைமெய்த்தபுகழ்கொண்டு நாளும்-நல்ல
செல்வமிகுவியாபார தர்மமதுவாழும் ௭

வசியகுலநகரத்தார் தானே-வந்து
வணங்குமெங்கள்கதிரேசன் சன்னதியிலானே ௮

சொன்னகவிதன்னையாங் கேற்ற-வதனில்
சொற்பிழைகள்வாராம லென்னையுமேகாத்த ௯

நன்னயமிகுந்த தெய்வானையம்மன்
நற்கமலடியிணையை நான் துதிப்பேன் ௧௦

அருமறைகள்புகழ்துதிகள் பூணும்-வள்ளி
யம்மையெங்கவிதனக் கருள்தரவும்வேணும் ௧௧

குருமுனியைப்பணிந்துகவி கூற-அதற்கு
குறைகளொன்றும்வாராமல் சபையிலரங்கேற்ற ௧௨

சீதையால்ராமனு முன்னாலே-வந்து
தெர்ப்பசயனஞ்செய்த திருப்புல்லாணியிலே ௧௩

நாதனருள்கங்கைகுல சீலன்-தங்கம்
ராமசாமிசொன்ன கவிக்குகந்தவேலன் ௧௪

எச்சரிக்கையென்றிடும்பன் கூறவந்து
இருபுறமுங்காவடிகள் நின்றுவிளையாட ௧௫

பச்சைமயிலேறியருள் சீலன்-நித்தியம்
பக்ஷம்வைத்தென்கவி யகற்றும்வடிவேலன் ௧௬

தென்கதிர்மாநகர் விளங்கவந்த
தேவாதிதேவர்ஜெயங் கூறியேமுழங்க ௧௭

அன்பானசன்னதி யிலங்க-கதிரை
ஆறுமுகவேலருட மாபதிதுலங்க ௧௮

முன்னாலேகோபுர முகப்பும்-எங்கள்
முருகேசன்கோவில்முழுச் செம்பால்வகுப்பும் ௧௯

அன்னமெனும்தெய்வானை மாடம்-வள்ளியம்மை
யவள்பந்தடித்துவிளை யாடிடுங்கூடம் ௨௦

மூதண்டயோகபதி யேறும்-திரை
முத்துலிங்கசுவாமியுட சன்னதியைப்பாரும் ௨௧

நாதமொடுகீதமு முழங்க-வசிய
நகரத்தார்கட்டிவைத்த சத்திரம்விளங்க ௨௨

காணிக்கைகொண்டுவெகு கோடி-ஜனங்கள்
கதிரேசன்சன்னதிக்கு வருவார்கள்தேடி ௨௩

மாணிக்ககெங்கைநீ ராட-இங்கே
மாதவர்களும்மனிதர்களும் வந்துநிதங்கூட ௨௪

பொன்னலங்காரநகர் வாசம்-எங்கும்
புகழ்பெற்றநவரத்ன மேவினையிந்தேசம் ௨௫

சொர்ணமிகுகதிரவள மெத்த-தோழி
சொல்லுகிறேன்நாட்டுவளம் வானுலகுநித்த ௨௬

இந்திரனுடையவலதி னாலேவந்த
ஏழுமேகமுமொன்று கூடியேமேலே ௨௭

சந்திரனெனவாகவுமே வோங்கி-சத்த
சாகரமதில்தாவி தண்ணீரைவாங்கி ௨௮

மாலெனவிசும்பிடை படர்ந்து-முகில்கள்
மண்டியேகெற்சித்து மின்னலுமடர்ந்து ௨௯

நாலுதிசைநாடியே தெளித்து-கதிரை
நகர்பூமியெங்குமழை மாரிகள்பொழிந்து ௩௦

ஏரிகுளம்வாவிகள் நிறைந்து-வயல்க
ளெங்கெங்குமேகன்னல் செந்நெலும்வளர்ந்து ௩௧

வீரியமிகுந்த தந்தின்-நல்ல
வெண்கமுகுசோலைமலை மேலெங்குந்தோண ௩௨

தனியேபழுத்திரு மாவும்-இதனில்
தாவியொருகொம்போடே கொச்சுகளுமேவும் ௩௩

இனியமலர்வாசனைகள் தேடும்-வீறென்
றிருபத்துநாலுகால் வண்டினங்கூடும் ௩௪

நாகமதுநாகமதி லேறும்-தய்ய
நாகமேபுனைந்தசில மாதரையும்பாரும் ௩௫

நாகமலர்சோருமலர் முல்லை-யிந்த
நாட்டினிலேகலைபகடுக் கொருகொம்புமில்லை ௩௬

முல்லையிருவாட்சிக ளெடுத்து-அந்த
முல்லையிலேயில்லில்லா மடவார்தொடுத்து ௩௭

வல்லினைதீரவெனத் தேடி-மாது
வள்ளிதெய்வானைக் கிடுவார்கள்கோடி ௩௮

சதுர்மறையும்புகழ்தேவ ரிங்கே-வந்து
தான்வாசஞ்செய்கதிரை மாணிக்ககெங்கை ௩௯

இதிலேநீராடுவது சித்தி-ஜென்மம்
ஈடேறுஞ்சாயுச்சிய பதவியிலேமுத்தி ௪0

கோலமாமலையழகைப் பாரும்-கதிரை
குமரேசனருளாலே வல்வினைகள்தீரும் ௪௧

மூலகணபதிக்கிளைய வாகன்-கதிரை
முத்துலிங்கோருக் கருள்செய்தயோகன் ௪௨

மாமேவும்புலிபுகழுந் தேட்டான்-கதிரை
மகிமைகளைச்சேடனா லளவிடமாட்டான் ௪௩

பூமேவுங்குழல்வள்ளி நேயன்-சுவாமி
புண்ணியன்தேவருக்கும் மனுதருக்கும்நாயன் ௪௪

பச்சைமால்தனக்குமரு கோனே-சுவாமி
பழனிமலைமீதினிலே மேவுமுருகோனே ௪௫

வச்சிராயுதன்தம்பி மருகா-உந்தன்
மலரடியெனக்குநிதந் தரவேணுமுருகா ௪௬

நவவீரர்துணையான குகனே-நம்பி
நாராயணன்றங்கை யபிராமிமகனே ௪௭

நவமணியணிந்த வொளிமூவா-நின்று
நடனமிடுமயிலேறி யெனைவந்துகாவா ௪௮

கனக்குண்டலமிட்ட நீதா-சுவாமி
கார்த்திகேயாலட்சம் படைவீரர்தானே ௪௯

தனமேருபாக்கியமருள்வேலா-எங்கும்
சர்வபரிபூரணா னந்தசிவபாலா ௫0

ஓராறுமங்கையர்கள் சேயன்-பவனி
ஒய்யாரமாகமயில் மீதுலவுதூயன் ௫௧

ஈராறுபன்னிருகை யாண்டி-புவன
மெங்கெங்குமேதுதி மிகுந்தமெய்யாண்டி ௫௨

ஆண்டிபொன்னாண்டிசிவ னாண்டி-பழனி
யாண்டிமலையாண்டிசிலை யாண்டியிவனாண்டி ௫௩

ஆண்டிமகனாண்டியிவ னாண்டி-நதிகள்
அழகானசாமிமலை திருப்பரங்குன்றாண்டி ௫௪

சிக்கல்புரவச்சேரி யாண்டி-சுவாமி
திருச்செந்தூரெட்டிக்குடி குன்றைக்குடியாண்டி ௫௫

மிகத்திருவேரகத் தாண்டி-கதிரை
மேவிவளர்வேல்முருக னாறுமுகந்தாண்டி ௫௬

சோலைமலைகழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலைவிராலிமலை சென்னிமலைபாண்டி ௫௭

வாலையருள்பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க்கேயெந்த நாளுமனுகூலா ௫௮

விடவரவுபடமும்விசை கெடவும்-படியே
வடவரைகள்கிடுகிடென பசஜுமமசைபடவும் ௫௯

கடல்சுவறகதிர்மதி கலங்க-தானி
கணவேகமாகவரு மயில்மீதிலங்க ௬௦

மேலாகிவிளையாடு மெய்யா-வெற்றி
காலாயுதத்தையு மெறிததமுருகையா ௬௧

சாலோகசாமீப மென்னும்-சுவாமி
சாரூபசாயுச்சிய பதவியிலேமுன்னும் ௬௨

ஆகவேநின்றபர நாதா-என்னை
ஆதரித்தாளாவா வேணுக்குருநாதா ௬௩

தாகமாயிருக்குதுனைக் காண-கந்த
சுவாமிவருவாயெனது கண்ணெதிரேதோண ௬௪

அரகரவேலனே நமாவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்த வடிவேநமாவோம் ௬௫

அரசராமுருகா நமாவோம-வாலை
யம்பிகைபராசக்தி மைந்தாநமாவோம் ௬௬

அரகராகுகனே நமாவோம்-சுவாமி
அன்பருக்கன்பான பொருளேநமாவோம் ௬௭

அரகராதேவா நமாவோம்-சுவாமி
அகிலபுவனத்திலும் நிறைந்தாய்நமாவோம் ௬௮

மயிலேறுமொயிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுந்தமிழ்முனிவன் குருவேநமாவோம் ௬௯

மயிலேறும்கந்த நமாவோம்-வட்ட
வடவாலில்மேவுமால் மருகாநமாவோம் ௭௦

மயிலேறும்நாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும்பரமனுட குருவேநமாவோம் ௭௧

மயிலேறுகின்றாய் நமாவோம்-தங்க
வடிவானவேலது வுகந்தாய்நமாவோம் ௭௨

திரிபுரபவா நமாவோம்-வாலை
சேயனேதிகழொளி பவாவாநமாவோம் ௭௩

பரிபுரபவாபவா நமாவோம்-வள்ளி
பாகனேபவனொழி பவாவாநமாவோம் ௭௪

சரஹணபவாவா நமாவோம்-கந்த
சுவாமியேசயலொழி பவாவாநமாவோம் எரு

தருமதுரையேநீரு மென்னை-நல்ல
தருணமிதுகாணிக்த வேளையிலேயென்னை எசு

காவாவுன்னிரடிகள் தன்னை-நான்
கண்டெனதுகலிதீர வந்துமென்முன்னே எஎ

வாவென்றுசொல்லமன மில்லையோ-உமக்கு
வள்ளிதெய்வானைவிடை தநதனுப்பவில்லையோ எஅ

தஞ்சமென்றேனை யுனக்கு-எனது
சஞ்சலமெனுங்கலியைத் தீர்ப்பாயெனக்கு எகூ

அஞ்சறிவுமானநா யகனே-சுவாமி
அகிலாண்டகோடி பிர்ம்மாண்டநாயகனே அ0

உன்கிருபைதந்துமேகண் பாரும்-இந்த
உலகமுழுதாள்பவனே யென்கலியைத்தீரும் அக

அன்புபெரும்வரைராஜன் போர-சுவாமி
அடியேனுன்னடியிணையைக் காணநீரார அஉ

வாவாயென்றேவாநீ யென்றே-சுவாமி
வடிவேலாவாவா வெனத்தொழுதுநின்றே அங

எவன்றேறடினாலுங் கேட்டும்-நமக்
கென்சொல்லிக்கவிபாடி னாலும்பாட்டும் அச

நமக்கென்னவென்றிருக்கி றீரோ-சுவாமி
ஞாயமோநானுமுறை யிட்டதறியீரோ அரு

உமக்குமனமிரங்காத தேது-எங்க
ளுத்தமிதுரந்தரியின் பாலாயிப்போது அசு

ஐயாநீகிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்டகோடிபூ மண்டலத்தின்மேலே அஎ

மெய்யானசரிதையி லனேகர்-அதற்கு
மேலானகிரிகையி லிருப்பவரனேகர் அஅ

தவயோகக்காரரவெகு வெள்ளம்-ஞானந்
தங்கியேயிருப்பவர்க ளோமகாவெள்ளம் அகூ

அவர்களைப்போல்நான்பிறந்த தில்லையோ-சுவாமிக்
காளாகவெனக்குவிதி வயனெழுதவில்லையோ கூ0

அன்னையவளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதியிலேமுன்னவர்கள் செய்துவந்தசதியோ கூக

என்னகுறையிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிகளாக வென்னையுமேசேர்த்து கூஉ

ஆளாக்கி யாளா லாகாதோ-எந்த
னகந்தனிலே நீயிருந்து வாழலாகாதோ (93)

பாழான மனங்குவியு திலேயோ-யென்ன
பாவமோ வதிலிருக்கும் பிசகுதெரியலையே (94)

வஞ்சகமில்லாமலே கண்பாரும்-முடிவில்
மறலிடதூதரெனை வருத்தாமல்காரும் (95)

அஞ்சுதலை யாராளுந் துரையே-உமக்கு
அஞ்சுதலை யால்வேத னிருந்ததுவுட்சிறியே (96)

ஆறுதலை கண்டரண்டய்யா-பின்பு
ஆறுதலை யாய்ப்பதியை யாண்டாரேமெய்யா (97)

ஆறுபடை வீட்டுக் கதிகாரா-வந்த
அசுரருட னஞ்சாத போர்புரியும்வீரா (98)

சத்தியுமை பாலகனே சாமி-எந்தன்
தாசனுக்குத் தாசனெனைக் காப்பதற்கேமி (99)

சுத்தபரி பூரணா வுன்னை-ஓதி
துதிக்குமடி யார்க்கடிமை யாகவருளென்னை (100)

பொய்யாத வாழ்வருள வேலா-கதிரை
ஐயாவே யெனையாளுந் தேவாதிதேவா (101)

ஒய்யார மானமுரு கோனே-வந்த
உற்பவ மெனுந்துதியை செப்புவேனே (102)

உரமான வசுரரிடராலே-தேவ
ரோடிமுறை யிட்டாரே கைலைமலைமேலே (103)

அரனசுரர் மேல்க்கோப மாகிய கைலை
யாளிவிழு தனிலேயொரு பொறிசிதறியேகி (104)

சரஹணப் பொய்கையிலமர்ந்து-அதுவுஞ்
சந்திரரோ தயம்போலே பாலனென வந்து (105)

உருவாகி மலர்மீதி லானார்-எங்கள்
ஓம்நமசி வாயாரெனும் பரமனருள்மகனார் (106)

அப்பவே சென்னியோ ராறாயே-மெத்த
வழகான செந்திரு புயங்க ளிராறாய் (107)

உற்பவ மானமணி ரண்டு-விழிகள்
ஒளிவாகிவோராறு பெண்கள்பா லுண்டுணா (103)

அயனையுஞ் சிறையினில் விடுத்தான்-கந்த
னரனுக்கு வுபதேசஞ் சொல்லியே கொடுத்தான் (109)

கயமுகா சூரன்முதலோரை-கந்தன்
கைவேலி னுலவர்கள் கருவறுத்தாரே (110)

தங்கவடி வேலலங் காரன்-மாது
தையல் தெய்வானை மணமேவி சிங்காரன் (111)

தென்கதிரை மானக ரிலங்கும்-சுவாமி
சிங்காரமா யுனது வருள்கிருபை பொங்கும் (112)

சித்தமு மகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக் கிணையான சித்தரமயில் வேலன் (113)

சத்திவேலாயுதமு முடையான்-பூண்ட
தண்டைகள் கலீரெனவே வந்தருளும் நடையான் (114)

கடகமெனு மானதிங்களிலே-எங்கள்
கதிரேசன் திருவிழா பவனிவரு கையில் (115)

கடல்போலே பேரிகை முழங்க விருது
கட்டிய மிருபுறமு மருகேதயங்க (116)

செங்காவிப் பட்டாலே கோடி-கொடிகள்
ஜெண்டாவு மாலவட்டக் குடைகள் பலகோடி (117)

மங்காத சாமரைகள் கோடி-வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர்கோடி (118)

சேர்க்கையாய் முரசுசங் கூத-நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் நான்மறையோத (119)

பார்க்கவெகு மாமுனிவர் வரவே-கவிகள்
பாடியே வரகரா வென்றுபுகழ்பெறவே (120)

ஆணிப்பொன் மாலைக ளிலங்க-மொய்த்த
அழகானவரலாத்தி தீபமேதுலங்க (121)

மாணிக்கப் பேழையி லுகந்தார்-கந்தன்
மதயானைமேலேறி யேபவனிவந்தார் (122)

மதகரியோ வருகிறதைப்பாரும்-சுவாமி
மாணிக்கப் பேழையி லுகந்ததையும்பாரும் (123)

கதிர்காம திருவிழா நேத்தி-எங்கள்
கந்தனு முகந்ததிரு வாபரணஞ்சாத்தி (124)

கரியுலவு வனமூடு சென்று-சொல்லக்
கதிர்காமம் போய்வந்து நீரறுப்பென்று (125)

கரியான பௌரணையை நாடி கந்த
சாமிசங் கீதபரிவாரமுடன் கூடி (126)

வாரிபோல் பெருகிநீ ரோடி-வார
மாணிக்க கெங்கையிலே வந்துநீராடி (127)

கூரான வடிவே சுமந்து-எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயுகந்து (128)

புள்ளிமயில் வேலர்விரை வாக-சென்று
பூவையெனுங் குறமாது கோவிலுக்குள்ளே (129)

வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு-வாரு
மணவாள ரென்றடி பணிந்தன்பு கொண்டு (130)

சித்ரமணி மலரணையிலத் தாவி-நல்ல
செங்கமலக் கரத்தா லணைத்திலகர் மேவி (131)

கொத்துமுத்து நத்துவளை திருத்தி-யிவர்கள்
குளிர்ந்தகம கமெனமலர் வாசனைகள்பொருத்தி (132)

இங்கிர்த மணுளகுண நீதா-யெனக்கு
யிணியசுக போகமத லீலாவினோதா (133)

எங்கள்குலம் விளங்கவந்த நேசா-சுவாமி
யெனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிசுவாசா (134)

அத்தைபெற்ற முத்தேயெங் கோனே-யென்ற
ஆரணங்கை யுபசரித்து தானேயம்மனே (135)

முத்திரையிட் டிலங்குகொங்கை யாளே-வள்ளி
மோகனமே யென்றந்த வேலவர்கையாலே (136)

கலந்தணைந்த சுகந்தமண வாசன்-எங்கள்
கட்டழகி வள்ளிதனை பார்த்துமதபோஜன் (137)

சலதரத்தைப் பழித்தகுழ லாளே-இந்திர
தனுவோவென் றதிசயிக்கும் புருவநுதலாளே (138)

எந்தனுக் கிசைந்த மனையாளே-வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக் குகந்ததுணையானே (139)

வந்துவெகுநேரமா குதடி-யெந்தன்
மாதுதெய் வானையெனைத் தேடிவொள்நாடி (140)

போய்வாரேன் விடைதாடி யென்ன-வள்ளி
பூவையவள் கேட்டெந்தன் சாமிநீர்சொன்ன (141)

வாய்ச்சம்பிர தாயம்வெகு வீச்சு-நான்
போய்வாருமென்றுசொன்னவகைதானென்னபேச்சு (142)

அங்கேபோய்செலுத்துமதி காரம்-யெந்தன்
அரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோவீரம் (143)

இங்கோரண்டு நாளிருந்து போனால்-சுவாமி
என்னகுறைவாகிவிடுங் காணுமுமக்கதனால் (144)

என்மனையி லிருக்கையிலே யவளேன்-உம்மை
யேன்தேடவேண்டியது தானிப்போது (145)

உண்மையெனக் கின்னதென்று தானே-சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளியென்மானே (146)

இங்கேவந்து நானிருப்பதாலே-யென்னை
யெங்கையோ வென்றுதெய்வானை யொருக்காலே (147)

மங்கையருந் தேடுவா னின்று-யெனக்கு
வள்ளிநீ விடைதாடி போய்வாறேனென்று (148)

இவர் கூறவள்ளிமின்னுளே-சுவாமி
யின்றிரவு யிங்கிருந்து போகலாம்நானே (149)

அவசர முமக்கென்னயங்கே-சுவாமி
ஆனாலும்நீர்போக சம்மதியே னிங்கே (150)

கூடாது உம்மைவிட மாட்டேன்-மூத்த
குடியாளுக்கஞ்சிநான் பயப்படவுமாட்டேன் (151)

தேடியிங்கே தெய்வானை வரட்டும்-யென்றும்
செப்புவதும் யொப்பினையும் வள்ளிகைநீட்டும் (152)

பார்த்தே தடிவள்ளி மானே சற்றும்
பாராம லிம்மொழிக ளேன்சொல்லுவானே (153)

ஆத்திர முனக்கென்ன போடி-தெய்வ
யானைக்கி நிகராவ ரோபெண்கள்கோடி (154)

சொந்தமாய் கிருபை பாராட்டி-அந்த
தோகையரைப் பருவமதில் நான்மாலைசூட்டி (155)

வந்தபடி யாலவ ளுனக்கு முந்தி
வந்தவளு மானதால நானுமவளுக்கு (156)

அடக்கமா யிருப்பதுவே சிலாக்கியம்-வள்ளி
ஆனாலும் வறத்துக் கதுதானே யோக்கியம் (157)

மடற்கொடி தெய்வானையவ ளிங்கே-நானும்
வந்தவகை தெரியாது தேடுவாளங்கே (158)

போகவிடைதாவென வதட்ட-யெங்கள்
பூவையெனுங் குறமாதுக் கதிகோபமூட்ட (159)

மாகணக மேடையி லிலங்கும்-உமது
மனையாட்டி மூத்தகுடி யாளெனவிளங்கும் (160)

தெய்வானை சொந்தமாய் போச்சே-நானுந்
திருட்டுத் தனமாய்வந்த கள்ளிபோலாச்சோ (161)

கைமாயஞ் செய்தோமே நாங்கள்-ஒருவர்
காணுதே மாலையிட்டு வந்தீரோவங்கள் (162)

காதியா ரேசுவா ரோகாண்-நீருந்
தலைமறைய யென்மனைக்கி வருவானே யேன்காண் (163)

ஆதியிலே யெனையு நினைத்து-வந்த
தறியாளோ தெய்வானை யும்மையழைத்து (164)

கூட்டிவந்த நாரதரைக்கேளும்-வனத்தில்
குளத்தருகிலே யிருந்த காடிபுலிவாழும் (165)

காட்டினி லுமக்குதவி செய்தார்-வுங்களண்ணன்
கணபதியைக்கேட்டாலுஞ்சத்தியமாய்ச்சொல்வார் (166)

சிவதலங்கள் செயசபைமுன் னாலே-வைத்து
தெய்வானை யைத்தாலி கட்டினதினாலே (167)

அவள்மாத் திரஞ்சொந்தக் கினையோ-சுவாமி
ஆனாலும் நான் கிழக்கு முகமிருக்கவிலையோ (168)

வள்ளியிவை சொல்லவே திகைத்து-சென்னல்
வளமான தென்கதிரைவேலனும் நகைத்து (169)

கள்ளிபோல் வீணிலிரை யாதே-பொல்லாக்
கசடான குறவரிட சாதியொளியாதே (170)

ரெண்டுசமு சாரமா காது-யென்று
நீணிலத்திற் சொல்லுவது சரியானதோகு (171)

வண்டர்குல மானேயுனை நாடி-வந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலாமோடி (172)

நில்லுநான் போய்வாரே னென்று-சொன்ன
நினவரிந்து வள்ளியவள் சீறியெதிர்நின்று (173)

வல்லப முமக்கென்ன காணும்-எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீர்போகவேணும் (174)

என்சமர்த்தைப் பாருமினி யென்றே-வள்ளி
இடைதனிலே சேலையை யிறுக்கியெதிர்கொண்டே (176)

அன்புற நெருங்குவது கண்டார்-வள்ளி
அப்பாலே நில்லென்று சொல்லுகிறேனென்றார் (176)

சொல்லுகிற சமாச்சார மென்ன உமது
தொழிலைநான் னெடுகிலு மறிந்துன்னியென்ன (177)

நல்லதினி மேற்கொண்டு பார்ப்போம்-உமது
ஞாயமதை தேவசபை யிலேசொல்லி கேழ்ப்போம் (178)

தேவசபை யிலேசொல்லிப்பாரு-அவற்கு
தெரியுமடி தினைப்புனத்தில நீயிருந்தசீரு (179)

ஓவியே உன்னுறுதி கேட்க-யெழுதும்
உடன்படிக்கைமுறியுண்டோ கொண்டாடிப்பார்க்க (180)

உடன்படிக்கை முறியெழுதித் தாரேன்-வள்ளி
யுனக்கேவல் செய்வதற்கு உன்பிறகேவாரேன் (181)

கடக்கிவனைத் தள்ளாதே மானே-யென்று
கட்டிமுத்தமிட்டது கசப்பேறுவானே (182)

தனியே வனத்திலிரு பேருங்-கூடுஞ்
சையோக வேளையிலே பார்த்தென்னைநீரும் (183)

இனியசெங் தேனைகற் கண்டோ-உந்த
னிதமென்று சொன்னதுவு மில்லையோவுண்டோ (184)

முன்னிருந்த யினிப்பென்ன போச்சோ-யிப்போ
மூத்தகுடி யாளுமக்கு சர்க்கரைபோலாச்சோ (185)

என்னைநீர் வசைசொல்வ தேனோ-சுவாமி
யென்குலத்தை நீரிகழ்ந்துபேசுவதுமேனோ (186)

தந்தைஉங்கள் தேட்டையெடுத் தாரோ-யெங்கள்
சாதியார் வந்துகிதந் தின்றுகொடுத்தாரோ (187)

ஏந்தனுற் குறைகளே துண்டோ-சுவாமி
இழுக்கெந்த சாதிகிது மில்லாமலுண்டோ (188)

மங்களாகல் யாணமதில் நல்லால்-அந்த
மணவறையி லென்தகப்ப னிட்டநகையல்லால் (189)

உங்களிடம் வந்தநாட் கொண்டோ-யெனக்கு
ருத்திராட்ச வட்டத்துக்கொரு நவமணி முண்டோ (190)

மாதிவையுரைக்கமுத் தையன்-வள்ளி
மங்கைதனைப் பார்த்தேது சொல்வார்மெய்யன் (191)

ஏதடிநீ பேச்சதிகங் கொண்டாய்-வள்ளி
யென்னுடைய சாதியி விழுக்கென்னகண்டாய் (192)

குபேரன்மகள்போலநீ பேசாதே-உன்தகப்பன்
கொடுத்துவிட்ட வரிசைகளைவெளியேசொல்லாதே (193)

சபையார்க ளென்னவதி யாரோ-யிந்த
தாரணியி லுள்ளவர்க ளெவருமறியாரோ (194)

உடுத்திவந்த துணிக்கிவேறுண்டோ-களிம்பு
ஊறிய பித்தளை யோலைக்கிவேறுண்டோ (195)

தொடுத்திருந்த கருகமணியோடே-யென்னை
துடர்ந்துவரும் போதுனக் கேதுபட்டாடை (196)

வண்ணார்கள் வெளுக்காத கலையுஞ்-சுத்த
வாணியர்கள் யெண்ணெயிட் டறியாததலையும் (197)

புண்ணுக்கு போயிழுக்கு வேலுங்-காட்டில்
புரண்டிசெடிமுள்ளிழுத்து சுரண்டிவிட்டகாலும் (198)

எப்போதுங் காய்கிழங்கு தின்று-நீயும்
இருந்தகெதி தெரியாதோவருவாரே தென்பின்னும் (199)

அப்பவே நானழைத்து வந்து-நல்ல
வாபரண மானதையு மழகாயணிந்து (200)

செம்பவள மாளிகை யமைத்து-உனக்கு
செங்கமலத் தாதிகளை யேவல்நேமித்து (201)

நம்பிநரன் செய்ததை மறந்து-வள்ளி
நாயகமே பேசுவது மென்னடியிகழ்ந்து (202)

மாதேநீ பதறுதே வாடி-யெந்தன்
மனமுழுது மறியாமல் சொல்லாதேபோடி (203)

கோதையே யிதுவென்ன மூர்க்கம்-உங்கள்
கூறறிந்து சொல்லுகிறேன் குறவரிடமார்க்கம் (204)

சாராயங் கள்ளுகள் குடித்து-குறவர்
சந்திக்குசந்தியே சண்டைகள் பிடித்து (205)

பூராயம் தெரியாமற் கத்தி-கண்ட
பூனைகளை யொராயாக முசலென்றுகுத்தி (206)

தின்பதுவு முண்டதிக மாக-குறவர்
சேரியிலே நீபழகி வந்தவைபோக (207)

செம்பவள வாயாளே யென்று-சுவாமி
செப்பவே வள்ளியவள் வெஞ்சினங்கொண்டு (208)

விண்ணுணம் பேசுவது சீரோ-சுடலை
மீதிலெலும் பானதுவை தின்றதுவுமாரோ (209)

கண்ணப்ப னெச்சில்தின் கலையோ-சிவனுங்
கரிக்காகப் பாலகனைக் கொன்றதுவுமிலையோ (210)

புத்தியுமக் கில்லாதே போமோ-கெட்ட
புனக்குறவர் பெண்ணைநீர் சம்மதிக்கலாமோ (211)

யெத்திசையும் புகழ்பெற்ற நாதா-வென்று
யிவள்சொல்லும் வசைகண்டு கூறுவார்தோதா (212)

அடங்தேறு வார்குடிமிகுந்தால்-குறவர்
அவர்தனக் கேசிலவுக் கில்லாதிருந்தால் (213)

கடன்வாங்குவர் சம்மதித்து-தாலி
கட்டிய பெண்டுகளை யீடாகவைத்து (214)

குடுத்துவிட்ட பணத்துக் கீடாக-வைத்த
குறத்திகளைப் பணங்கொடுத்த குறவன்வெகுவாக (215)

அடுத்தவளைய லனுதினமுங் கூடி-யிவர்கள்
அஞ்சாறு பிள்ளைகளைப் பெற்றபின்தேடி (216)

பணங்கொடுத்து திருப்புகிற போதுபெற்ற
பாலரையுங் கூடவே கூட்டியவள்மாது (217.

குணமாக முன்னீடு வைத்த-பழைய
குறவனுடன் போவதுங்கள் சாதிமெத்த (218)
இதுபுதுமை இவ்வுலகிலுண்டோ-வள்ளி
யேந்திழையே யிதைவிட லெச்சைவேறுண்டோ (219)
கதிகொண்ட மயில்வா கனத்தார்-இந்தக்
கதைசொல்லவே வள்ளியவ ளெதிருரைத்தாள் (220)
குறத்தியென்று யெனக்குவசை புரியுஞ்-சுவாமி
கும்பமுனி யாலுங்கள் சேதிகொஞ்சஞ்தெரியும் (221)
மறந்தீரோ நீரதிந்த திலேயோ-உன்னப்பன்
மலைவேடன் மகளைப்போய் மாலையிட்டதிலேயோ (222)
சிந்தைமகிழ் தொருபெண்ணைத் தூக்கி-உங்கள்
சிவன்தலையில் வைத்துமே சுமந்ததுக்குச்சாட்சி (223)
கந்திகேசு பார்சொல்லக் கேட்டேன்-சுவாமி
ஞாயனிச மில்லாமல் நான் சொல்லமாட்டேன் (224)
ஆட்டுக்கா லதுதனை யெடுத்தார்-உங்க
ளப்பனென் றவனிமுழு தெங்கும் பழித்தார் (225)
கேட்பா ருமதுதாய் ஐயோ-ஒற்றை
மாட்டுக்காரனைவைத் திருந்தவும்பொய்யோ (226)
கண்ணு யிரங்கொண்ட நேத்தி-யெம்மான்
பெண்ணுசை கொண்டல்லோ வந்தவபகீர்த்தி (227)
பெண்ணொருவர் கொடுக்காததெதினல்-உன்னண்ணன்
பெறுவயறு கொண்டுவழுக் கரையிலிருந்ததினல் (228)
அண்ணனுமே மத்தளங் கொட்ட-சொந்த
அருமைமரு மகனின்று கைதாளந்தட்ட (229)
விண்ணவர்கள் கூடியே நகைக்க-வந்த
வேதியரும் மாதவருங் கண்டுபிர்மிக்க (230)
தேவடியாள் போலுமது வுன்னை-கூடுந்
தேவசபை யிலேனின்று ஆடலையோமுன்னை (231)
பாவலருக் கருள்புரியுஞ் சீலா-யிதையும்
பார்த்தவர்கள் சிறியாரோ தங்கவடிவேலா (232)
பத்மாசூர னுக்கு மிகப்பயந்து-உங்கள்
பரமசிவனோடலையோகாட்டுவழிநடந்து (233)
கைப்பொருளுமில்லாமல் தேகி-யென்று
கைப்பிச்சைவாங்கலையோபரமசிவயோகி (234)
கும்பமுனிக்கருள் புரிந்தோரேயென்று
கூவியேவழிசொல்லுமொழிகளறிந்தாரே (235)

தென்பான யென்மோக வள்ளி-யிந்த
சீமையிலே திருவடிவனங் குறவர்குலக்கள்ளி ௨௩௬

குடிகொண்ட வனக்குறவச் சாதி-வகையை
கூறறிந்து சொல்லுகிறேன் கேளும்பர்சேதி ௨௩௭

சதிர்பெருகுந் திருவிழாச் சடையில்-சனங்கள்
சந்தடிகளாகவே சயனிக்குமிடையில் ௨௩௮

கூசாமல் கூடவே படுத்து-தூக்கம்
குலையாமல் பணிதிகளைக் கழற்றியேயெடுத்து ௨௩௯

பேசாமலோடுவது கண்டு-குறத்தி
பெரியதனக் காரர்களு மேபிடித்துக்கொண்டு ௨௪௰

வம்பிலே தலைமயிரைக் கட்டி-குறத்தி
மார்பிலே போடுவார் சொல்லென்றுகிட்டி ௨௪௧

செம்பாணி கொண்டுமே யிருத்தி-அவர்கள்
சேலையை யுரிந்தம்மண மாகவேநிறுத்தி ௨௪௨

அடிதண்ட மாகவே யிடிப்பார்-குறவர்
அப்பாவு மெடுக்கவில்லை யென்றுமே ௨௪௩

தடியடிக்கி யசையாத சாதி-குறவர்
அங்கைகெட்டு நிற்பார்கள் தெரியுமவர்சேதி ௨௪௪

என்றிவ ருரைக்கவுமே மாது-சுவாமிக்
கெதிராக நின்றேது சொல்வாளப்போது ௨௪௫

தொண்டர்தொழு கின்றமயிலேறுஞ்-சுவாமி
சொல்லுவேனுங்கள்குல வளமைகளைப்பாரும் ௨௪௬

அடையாளஞ் சொல்லுகிறேன் கேளும்-நல்ல
ஆவினங்கள்கூடிவரு மாய்ப்பாடிவாழும் ௨௪௭

இடையருட வளவிலென்னாளும்-உறியி
லிருந்தவெண்ணை திருடினதை யாரென்றுகேளும் ௨௪௮

அன்றுடன் யசோதையறிந்து-வந்து
ஆவினங்கள் கட்டுகிற கயறுல்வரிந்து ௨௪௯

ஒன்றாக மாதரொரு பக்கங்-கூடி
உரலோடே கட்டினதைச் சொன்னாலும்வெட்கம் ௨௫௰

கட்டுண்ட தும்மோச மிலையோ-பெண்கள்
கட்டிய சேலைகளைக் களவாண்டதிலையோ ௨௫௧

வெட்டிய சமர்க்களத்தி லேரும்-கிருஷ்ணன்
விசயனுட குதிரைகளை மேய்க்கலையோபாரும் ௨௫௨

ஊத்துகிற கஞ்சிகளை யேத்தார்-கிருஷ்ணன்
ஊர்க்காலி மாட்டையெல்லாங் கூட்டியங்கேமேய்த்தார் ௨௫௩

கூத்ததிக முண்டின்னம் ரொம்ப-சொல்லக்
கூசுதே யென்மனமு மென்றிவளியம்ப உ௫௪

கேட்டவடி வேலவர்கை நீட்டி-வள்ளி
கேளடியுங்களுட வீடுமலைநாட்டில் உ௫௫

நீட்டியிரு கால்களை நிறுத்தி-அதனில்
நெடுமுட் டாகவளை கூட்டியேபொருத்தி உ௫௬

நத்திய கயற்றால் வரிச்சு-மழைக்கு
நனையாமல் மூங்கிலிலை யால்மேய்ந்தகுச்சு உ௫௭

சுத்திவைத்த சுவரெல்லா மோட்டை-யனந்து
தாங்கவும் விடாதங்கே முணுமுணுத்தமூட்டை உ௫௮

ஆடேறி மேயுமதில் தொல்லை-வீட்டில்
அஞ்சுபேர் தனக்கதிக மிருக்கவிடமில்லை உ௫௯

மூடாத வாசல்களைக் கண்டு-பார்த்து
மூடினு லுசரவொரு முகட்டொழுக்குமுண்டு உ௬௰

தேடாத பொருள்சிலவு காணும்-வைத்த
தீபமுந் தெரியாது தோணாமல் தோணும் உ௬௧

கூடாது குறவீட்டை நம்ப-சற்றே
குந்தவைக்க முடியாது நசுந்தப்புரொம்ப உ௬௨

குறம்பாடிக் கஞ்சிகளை வாங்கும்-உங்கள்
குறவருட பக்கியெல்லாங் கூரையிலேதூங்கும் உ௬௩

வரம்பேது மில்லையென் றாளும்-யென்று
வடிவேலர் சொல்லவே வள்ளிதுன்னாளும் உ௬௪

தமக்கென்று சிறுகுடிசை கட்டி-குறவர்
தானிருப்பதுவேவசை யில்லாதகெட்டி உ௬௫

உமக்கொரு தலத்தினிலும் நாடி-சுவாமி
ஒண்டயிட மில்லாமல் மலைக்குயலையாடி உ௬௬

கையிலரைக் காசுமே யில்லாமல்-வீடு
கட்டியே குடியிருக்க வகையு மறியாமல் உ௬௭

வெய்யலிலும் வேனிலிலுங் காய்ந்து-சுவாமி
மெத்தவரு ஷித்தமழை பனியால்கனிந்து உ௬௮

இருப்பதுவைக் கண்டுமனம் வாடி-உமக்கு
யிவ்வுலகி லுள்ளவர்க ளெல்லோருங்கூடி உ௬௯

சிறக்கவே கோவில்க ளமைத்து-உமக்கு
செம்பொன்மணி யாபரணம் விருதுகள்சமைத்து உ௭௰

வடிவேல வாவென்று யெண்ணி-உமக்கு
வரிசையிட்டுவைத்தார்கள் பிரதிஷ்டைபண்ணி உ௭௧

அடியவர்கள் புண்ணியமீ தய்யா-நீரும்
அழகான கோவில்களி லிருக்கிறது மெய்யா உஎஉ

தேருமக கரிபரியு மிரவல்-உமக்கு
செயமேள பேரிகையுங் கோவில்களுமிரவல் உஎ௩

ஏறுமயில் வாகனமு மிரவல்-உமக்கு
யிட்டநவ ரத்னமணி யாபரணமிரவல் உஎ௪

இத்தனையு முமக்கிரவல் தானே-குறவர்
இருப்பிடத்தைப் பழிக்கிறீ ரெண்ணமல்வீணே உஎ௫

வெற்றிவே லதுதானே சொந்தம்-உமக்கு
வேறேயொரு ஆஸ்திகளின் மேலென்னசொந்தம் உஎ௬

மச்சமுனி மறைபொருள்க ளாலும்-உங்கள்
வங்கிஷ வகுப்புகளைச் சொன்னாரேகேளும் உஎஎ

மச்சானே மறையோதும் வேதன்-உமக்கு
வாய்த்ததொரு மாமனே அளவளந்ததாதன் உஎஅ

ஆத்தாளோ பாளுருப் பறச்சி-அவளுக்
கருமையுள்ள தமையனையும் வளர்த்தவளுமிடைச்சி உஎ௯

தாத்தாவோ மீன்காரக் கரவன்-உமக்கு
தள்கர்த்த னைவனும் நல்லகுலமறவன் உஅ௰

அரனென் றுமையீன்ற தய்யா-சங்க
மாண்டியல்லோ சாதியிலே சொல்வார்கள்மெய்யா உஅக

வரமுறைக ளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள்தெரியாதோ பலசாதிக்கூட்டம் உஅஉ

இதற்குமுன்னே நானறிந் தாலும்-உமக்கு
இசைவேனோ நீர்குட்டிக் கரணம்போட்டாலும் உஅ௩

அதற்கென்ன செய்பலா மையா-நாங்க
ளானாலும் குறச்சாதி யென்பதும்பொய்யா உஅ௪

பண்டாரம் நானென்று கத்தி-யெந்தன்
பரணைதிரே வந்தீரே யதுவென்னபுத்தி உஅ௫

கொண்டுகுலம் பேசுவது போச்சே-சுவாமி
கொய்த்தினை மாவுக்கெனை கெஞ்சினதும்போச்சே உஅ௬

பேருதெரி யாமலுருமாறி-வந்து
பிசகுசெய்த மாதரியினலேமதமீறி உஅஎ

பாரமதயானையும் வராவிட்டால்-உமது
பாசாங்குக்குள்ளாக மாட்டேனில்லாவிட்டால் உஅஅ

வழகியிந் தாடிகுற வஞ்சி-யென்று
வனவேடன்போல்வந்து யென்னெதிரேகெஞ்சி உஅ௯

களையாகு தெணவைந்து முட்டி-நீரும்
காரியங்கள்கொண்டபின் பேசுகிறீர்கெட்டி ௨௯௰
வலியநான் வந்தேனோ தொட்டு-நீரும்
வஞ்சகம் பேசுகிறீ ரிதுவென்னசெட்டு ௨௯௧
கலியாமல் நீருறுதி சொன்ன-மொழிகள்
தவறுவரோ கலிகால மானாலுமென்ன ௨௯௨
பொன்னடி துலங்கியவென் மாமி-பெற்ற
புண்ணியனே யனுதினமு மகலாமல்சாமி ௨௯௩
யென்னருகி லிருமென்று கேட்டால்-வாமி
யென்குலத்தை நீர்பழிக்க யுமக்குவிளையாட்டா ௨௯௪
வையகத்துக் கேற்காது யென்னே-நீரும்
வஞ்சகம தாயிழந்து பேசுவதுதன்னே ௨௯௫
தெய்வானையோ சொல்லி விட்டாள்-எந்த
சிறிக்கியுமக்கிவ்வளவு சூதுசொல்லிதொட்டாள் ௨௯௬
எப்படியோ நானறிய வில்லை-லோக
மெங்கும்நீர் போகாத விடமொன்று மில்லை ௨௯௭
இப்படியு மருந்திட்ட தாரு-உமக்கு
யேலாதோ சொல்லவந்த மங்கையர்கள்பேரு ௨௯௮
வருந்திவிருந் தளித்தவளைச் சொல்லு-அவளை
மயிர்பிடித்துக்கொண்டாறேன் சற்றேயிங்கேநில்லும் ௨௯௯
மருந்திடு மயக்கமில்லா விட்டால்-எனக்கு
பதில்சொல்ல மாட்டீரோ நானெதுவுங்கேட்டால் ௩௱
முருக்குவளை தாதிகளே வாடி-நம்ம
முத்துலிங்க சுவாமியேநீ கூட்டிவாபோடி ௩௱௧
கருதுகருந் திடிபிசகு தோணும்-எந்தன்
கணவனெனுங் கந்தருக்கு கைபார்க்கவேணும் ௩௱௨
மின்னேரெ யென்றிவளுஞ் சொல்ல-எநதன்
மேலரிது புதுவையெனக் கேட்டவருமெள்ள ௩௱௩
யென்னடிவீண் யோசனைகள் கொண்டாய்-நானும்
யெவர்வீட்டி லேயிறந் துன்னைதநீகண்டாய் ௩௱௪
என்னுடைய சொல்வுறுதி மீறி-நீயும்
எதிர்பேசின திலுமேலுன்னை நான்சீறி ௩௱௫
சொன்னவகை யல்லாது கண்ணே
தோகையே நானுமுனை பேசுவனோபெண்ணே ௩௱௬

மயங்காதே நீவள்ளி மாதே-உந்தன்
மனமறிய நான்சொன்ன தல்லாதிப்போதே ௩௱௭

ஜெயமாக நான்போயி வருவேன்-வள்ளி
தினமுமுனைப் பிரியாமல் தெரிசனமுந்தருவேன் ௩௱௮

உந்தனைவிட் டகல்வேனோ மானே-யென்று
வுபகாரஞ் செய்தங்கி ருக்கையிலேதானே ௩௱௯

கந்தனையுங் கோவிலுக்கு தேடி-அங்கே
காணாமல் தெய்வானை யம்மன்வாடி ௩௱௰

மங்கையரே சந்த்ரப்பிர காசன்-அந்த
மாணிக்க கெங்கைக்கு போனமுருகேசன் ௩௧௧

யெங்கேயென வேலவரைத்தேடி-நீங்க
ளிதுநிமிஷம் வரவேணு மென்றிடவேயோடி ௩௧௨

தாதியர்க ளெல்லோருஞ் சென்று-யெங்கள்
சண்முகவே லாயுதனைத் தேடினாரென்று ௩௧௩

ஆதிசிவமாணிக்க கெங்கை-தீர்த்த
மாடவந்த வேலவரைக் கண்டீர்களோயிங்கே ௩௧௪

பாதிபிறை நுதலழகி யாளே-அவள்தன்
பர்த்தாவைக் காணோமென்று தேடவேதினாலே ௩௧௫

கதித்தபுசழ் கொண்டமுனிவோரே-யெங்கள்
கந்தனையுங்கண்டதுண்டோ சொல்லுவீர்நீரே ௩௧௬

காணிக்கைகொண்டு வந்தோரே-எங்கள்
கட்டழகிதெய்வானை மணவாளனாரே ௩௧௭

மாணிக்ககெங்கைநீ ராட-யிங்கு
வந்தவரைக் காணீர்களோ யினியெங்கேதேட ௩௧௮

பாங்கியர்கள் நதியெங்குந் தேட-கோவில்
பணிவிடைக் காரர்தெரு வீதிவழிநாட ௩௧௯

ஏங்கியவர்தேடுவது கண்டு-சுவாமி
யெங்கோனுஞ் சிந்தையி லறைந்தன்புகொண்டு ௩௨௰

நினைவில்மறக் காதெய்வானை-யிந்த
நிமிஷமேகூட்டிவா வென்றேவுஞ்சேனை ௩௨௧

எனையழைக்க வேணுமென்றுதேடி-வாறார்
ஏந்திழையே நான்போயிவரவும்விடைதாடி ௩௨௨

தாடியென்றுசொல்லவே திகைத்து-வள்ளி
தையலருஞ் சுவாமிகளைப் பார்த்துமேநகைத்து ௩௨௩

தேடிவந்தபேர்களைநா னடிப்பேன்-அந்த
தெய்வானை வந்தாலு மேசண்டை பிடிப்பேன் 324

என்னுடையகணவனையுந் தேட-அவளுக்
கென்னவதி காரம்விடை கேழ்க்குறீரோட 325

மன்னவா யிதுவென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனை யுபசாரஞ் செய்தருகில்நின்றே 326

யெனக்குரியமானே நீ கோபம்-இப்போ
யென்பேரில் வைக்காதே வீண்மனஸ்தாபம் 327

உனக்குநான் பிசகுசெய் வேனோ-பெண்ணே
யோசனைகள் செய்யாதே நான்மறப்பேனோ 328

போய்வாறேன் வள்ளி தயவாக-யெனக்கு
புகழ்ந்துவிடை தாடிதெய் வானையிட மேவ 329

வாய்திறந்து சொல்லுமென மகிழ்ந்து-யென்று
வடிவேலர்கேழ்க்கவே வள்ளியு முகந்து 330

மறைபுகழு கின்றவடிவேலா-சுவாமி
மனவருத்த மில்லாமல் போய்வாருஞ்சீலா 331

இறையவருக் குகந்தமகனாரே-யென்று
யிவள்சொல்ல வேலர்வழி கூடிநடந்தாரே 332

சித்திர வடிவேலர் நடந்தார்-இங்கே
தேடிவந்த தாதியர்கள் கண்டபடி பணிந்தார் 333

வெற்றிமயிலோனன்பு கொண்டு-கோயில்
மேவியதெய்வானையையுங் கண்டெதிரேசென்று 334

மங்கையரே யெனைத்தேடு வானேன்-நம்ம
வள்ளியம்மை தன்னுடைய கோவிலுக்குப்போனேன் 335

செங்கமல மாதேயென் கண்ணே-யிப்போ
தேடினது மென்னவகை சொல்லாயோ பெண்ணே 336

தெய்வானை யென்றார் துணிந்து-அந்த
தேவிசெவ் வேள்பாத மலரடி பணிந்து 337

வைபோக மானவடி வேலை-உடைய
மணவா உமக்குசித மிதுதானோ வேலை 338

இளையாள்மே லிருக்கிற பாசஞ்-சுவாமி
யென்பேரிலேனில்லை யுமக்குவிசுவாசம் 339

அழையாம லிருந்தோநீர் காணும்-வள்ளி
யவள்மனைக்கி நிதப்வலியப் போகவேணும் 340

முழுக்கவே யும்மாலேயேச்சே-சாதி
முறைதவறிக் குறவருட சம்மந்த மாச்சே 341

இழுக்கான சாதியிலேகி-மாலை
யிட்டாலு மேன்மையது தருவாரோ யோகி 342

அடிக்கடிநீ ரவள்மனைக்குப் போனால்-மெத்த
வலக்களிப்பாகவே சொல்லுவாளானால் 343

குடிதனி லுயர்ந்தவளு மில்லை-வள்ளி
குறவர்குல மானதால் சொன்னேனென்சொல்லை 344

நிசமென்று நீரெண்ணுவீரோ-உமக்கு
நேர்ந்ததுவும் வள்ளியுட மோகமறிவீரோ 345

அசையாம லானந்தமீறி-வள்ளி
ஆசைகொண்டு பேசுகிறீர் நானுமக்குப்பாரி 346

யாகிநா னெடுத்ததென்ன கோட்டை-புவியில்
அறியாரோ நீரெனக்கு தேடிவருந்தேட்டை 347

தேகியென வாண்டிபோ லானீர்-வள்ளி
தேவியவள் தினைமாவை தின்கவேபோனீர் 348

திரிபுவனை யருள்பெற்ற பாலா-உமது
சித்தமது வெப்படியோ கதிர்வடிவேலா 349

அரிமருக ரேயென்றுரைக்க-யெங்க
ளாறுமுகன் சொல்லுவார் தெய்வானைமிக்க 350

மானேநான் உன்வருதி பெற்றேன்-பின்பு
வள்ளிதனை மாலையிட்டு கூட்டிவந்து வைத்தேன் 351

தேனேயென் மேற்பிழைக ளில்லை-உனக்கு
தெரியாதே வீணுவில் பேசுவதுதொல்லை 352

கோவினுக்கு நீபோடி யென்று-யெங்கள்
குமரேசன்சிம்மா சனத்திலேயென்று 353

சேவலொரு கையினி லிருக்க-யெங்கள்
சித்திரவடி வேலவரு மேகொலுவிருக்க 354

சூடதீவாரா தனைக்கி-வந்து
சூழ்ந்தார்கள் கோடானு கோடியன்றைக்கி 355

அடியவர் பணிந்துதுதி பாட-கதிரை
ஆறுமுகன் மீதினில் கவிமாலைசூட 356

சிம்மா தனத்தி லிருக்க-யெங்குஞ்
ஜெயஜெயென வந்தவர்கள் சூழவேபெருக்க 357

அம்மா பரஞ்சோதி பாலன்-நல்ல
அன்புட னருளுவா ராறுமுகவேலன் 358
துன்பவினை யணுகாமல் தானே-நீங்கள்
சுகமாக வாழ்வீரென் றெல்லவர்க்குத்தானே 359
தென்கதிரை வேலரருளாக-லந்த
தேவர்களு மனிதர்களுந் தங்கள்பதிக்கேக 360
சித்தர்களும் வந்துநிதம் பணிய-யிந்த
செந்தமிழ் தனக்குதவி செய்சுப்பிரமணிய 361
கர்த்தனரு ளாலேகுறை வில்லை-ஆருங்
கதிர்காம மென்றாலும் வறுமைகளுமில்லை 362
தேவர்களு முனிவர்களும் வாழி-யெங்கள்
திருமாலு மயனரனு முமையவளும்வாழி 363
நாவலரும் பாவலரும் வாழி-வள்ளி
நாயகன் மேற்கவியி தென்னாளும்வாழி 364
புள்ளிமயில் வடிவேலும் வாழி-யிந்தப்
புவியெங்கும் நகரத்தார் புகழ்பெறவேவாழி 365
வள்ளிதெய் வானையுடன் மேவி-யோக
வாழ்வுபெறுங் கதிரேச னென்னாளும்வாழி. 366

கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு
முற்றிற்று.

உ

சிவமயம்.

கதிர்காமத் துயேசல்.



சீர்வளருங்கதிரை நாதன்மேல்சிந்துபாட
சித்திவிநாயகனை யெண்ணியே-வாலை
சத்திசிவனைத்துதி பண்ணியே 1

சத்திசிவனருளும் வெற்றிவேலவர்மலர்த்
தாளிணை தன்னை மறவேனே-கந்த
வேளெனுமெங்கள்முருகோனே 2

கோளெனுமிக்கிரனுந் தேவருந்துதிசெய்யுங்
கும்பன்குருவைப்பணிந் தேற்ற-வெகு
யின்பமுடனேகதை வாழ்த்த 3

யின்பமுடனேவரு மன்புள்ளதோழியரே
யெங்கள்குலதேவனருள் சேரும்-இந்த
தென்கதிர்காமமதைப் பாரும் 4

தென்கதிர்காமமென்றால் யெங்கும்பிரகாசமாக
சேவல்க்கொடிதுலங்கு தோதையா-இந்த
மாவளமாநகரில்த் தானையா 5

மாவளமானயிந்த மாநகர்தனில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகோன் பெண்ணே-வேல
ரிங்கேயிருக்கிறார்தான் கண்ணே 6

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவரென்றால்
யிந்தமதகரிமேல்ப் பாரையா-மேவி
யந்தாபவனிவாற தாரையா 7

அந்தாபவனிவரும் கந்தன்பன்னிருகையன்
ஆனைமேலேறிவரு வோரடி-தேவர்
சேனைசேனாதிபதி தானடி 8

சேனாதிபதியிவ ரானைமேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும் லோலனை-வெகு
அருமையாயீன்றவளார் வேலனை 9

அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளையெங்கள்பர மேஸ்வரி-கைலை
காத்தாளேமங்கைமங்க ளேஸ்பரி 10

காத்தாளேசெங்கைவேல னாத்தாளிவளென்றீரே
கயிலாசநாதர்க்கிவ ளாரு-யெனக்
கோயிலாகசொல்லு மறுசீறு 11

ஓயிலாகயீஸ்பரியுங் கயிலாசநாதருக்கு
உத்தமி சொந்தமனையாளடி-வாலை
சத்திசிவனென்பார்கள் கேளடி 12

சத்திசிவனையவர் பெற்றிடும்ரதிமதன்
தான்வந்தெதிர்த்ததென்ன சீரையா-சிவன்
ஏனவர்தன்னையெரித் தாரையா 13

ஏனெரித்தாரென்றாயே மாரனேயுடையவர்மேல்
யேதுக்குப்பாணமகனே னெய்தான்-சிவன்
வாதுக்கனலாகவேதான் செய்தான் 14

வாதுக்கெதிர்த்துவந்த போதுவிசயன்வில்லை
வாங்கிசிவனையடித்தே வைதான்-சிவன்
தாங்கியருளவர்க்குயேன் செய்தான் 15

தாங்கினதுதவத்தா லோங்கியபார்த்தனெனுந்
தானேபொறுத்தாரருள் சிந்தையார்-இந்த
ஆனைமேல்வாறகந்தன் தந்தையார் 16

ஆனைமுகமும்பெரும் பானைவயறிலங்க
அந்தாயிருக்கிறாரே பாரையா-ஒரு
தந்தமிலங்கியவ ராரையா 17

தந்தமதுதுலங்க வைந்துகரமிலங்க
தனியேயிருக்கிலவர் தான்பெண்ணே-வள்ளிக்
கினியகுமரன்தமை யோன்கண்ணே 18

இனியகுமரனையும் கனிவாய்வளர்த்தெடுத்த
யீசனுக்குயிந்தப்பிள்ளை யேனோ-தந்தி
வேஷமெடுக்கவிதி தானோ 19

வேஷமெடுத்துகண் டேசியவள்ளியஞ்சி
வேலெனுங்கந்தனைக்கொண் டாடினாள்-ஒரு
தாழ்வன்றிமாலையிடக் கூடினாள் 20

தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிருந்தகந்தன்
சங்கையில்லாமல்கெஞ்சி னேரே-குற
மங்கையைக்கூட்டிக் கொஞ்சினாரே 21

மங்கைகுறவரிட தங்கையல்லடிபெண்ணே
வந்தபகவன்முனி வேண்டி-ஆதி
சொந்தமாய்ப்பெற்ற வள்ளிதாண்டி 22
சொந்தமாய்வேலனுக்கு யிந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லையோ மணமாலை-திருப்
பூட்டவில்லையோபுவி மேலை 23
பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாளையிலே
பூமணஞ்செய்தாரடி வேலன்-ஆழி
வாமனன்தங்கையருள் பாலன் 24
வாமனனேமஞ்செய்து நேமகமாய்மாலையிட்டு
வந்தவர்வட்டக்குடை மின்ன-யிந்த
தந்திமேலேறிவாற தென்ன 25
தந்தியிலேறிவார திந்தத்திருவிழாவின்
சங்கையதுதாண்டி கண்ணே-சுவாமிக்
கிங்கேவளமையிது பெண்ணே 26
இங்கேவளமையென்று லெங்கும்பகலைப்போலே
யிருபுறமுஞ்சனங்க ளேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே 27
காந்தியுடனேகையி லேந்திக்கொண்டாடிச்சிலர்
கர்ப்பூரதீபமதைத் தூண்டி-வாறூர்
சுப்பிரமணியனுக்கே தாண்டி 28
தாண்டியுபசரித்து வேண்டியவர்மஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்த தாரையா-வேலை
சித்திரமானதிதைப் பாரையா 29
சித்திரமானவன்ன சத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர்நகரத் தாரடி-வைத்த
நந்தவனத்தைச்சுற்றிப் பாரடி 30
நந்தவனமும்வைத்து சொந்தமடங்கட்டிய
நகரத்தாரென்றுலவ ராரு-அவர்
புகழ்பெற்றிருப்பதெந்த வூரு 31
ஊரொனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண்ணூற்றுறா ராரடி-வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டை யாரடி 32
நாட்டுக்கோட்டையாரென்றுல் வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா-புகழ்
நீட்டும்நகரத்தார்கள் தானையா 33
தானையாவென்றுசொன்ன மானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேயா பாரமுஞ்-செய்ய
வந்தவர்களிவரென் னேரமும் 34

என்னேரமுங்கொழும்பில் சொர்ன்னயாபாரஞ்செய்தால்
யிந்தகதிர்காமத்தை நாடியே-யிவர்
வந்ததென்னபுகழ்கள் பாடியே 35

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடிமதப்
பௌரணைக்கேவரு வாரடி--யிங்கே
வருஷங்கள்தோறும்வெகு சீரடி 36

வருஷங்கள்தோறுமிங்கே வருவாராஞலுஞ்சொந்த
மானகர்க்கேகிஞ லப்போதுகாண்-யிங்கே
தான்வேலெடுத்துவார தாருகாண் 37

ஆருகாணென்றாய்புக ழேரும்புதுக்கணக்குக்
காகவந்தநகரத் தார்கள்—வெகு
சேகரமாகவரு வார்கள் 38

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிகுந்தவரே தோணும்—நல்ல
கல்விமிகுந்தவரோ காணும் 39

கல்வித்திறமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே-வெகு
விந்தையாய்நாட்டுக்கோட்டை யாருக்கே 40

நாட்டுக்கோட்டையாருக்கு நீட்டும்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத் தானையா-யெங்கும்
சகலபேர்களும்சொல்வ தேதையா 41

சகலயாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவறாமல்ச்செய்துவந்த தோதினல்-புவியி
லிவரேநகரத்தாரென் றேதினர் 42

இவர்களைப்போலனேசர் யெவ்வளவோதர்மஞ்செய்தார்
யேனையோகானுமந்த நாளில்லை-அப்போ
தானவர்க்கந்தபே ரேனில்லை 43

பேர்புகழ்சரிதைகிரிகை கேருங்குகனருளும்
பெற்றதினல்நகரத்தாரே-யென்று
யெத்தலத்திலுமுரைத் தாரே 44

எத்தலத்திலும்புகழ் பெற்றமதுரைச்சொக்கர்
யிருக்குங்கோயிலையெல்லாந் தானையா—பொன்னல்
சிறக்கவலங்கரித்த தாரையா 45

ஆரென்றாய்பெண்ணேயெங்கும் பேரானதென்மதுரை
ஆலயத்தைப்புதிப்பித்த தாரடி-வடி
வேலனருள்நகரத் தாரடி 46

வேலனைப்பெற்றசத்தி வாலைசிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பர நடேசனர்-சபை
யாவும்புதிப்பிக்கிற தாரையா 47

புதிப்பிக்கவேணுமென்று மதிப்பித்துகந்துசெய்தார்
புவியில்ப்புகழ்நகரத் தாரடி-முகில்கள்
குவியும்தண்மைபோல்கொடை யாரடி 48

கொடைபார்கள் தர்மம்செய்ய சடையாரோவாணிபத்தில்
கூடும்முயர்ச்சியுள்ள வாழ்வுளோர்-புகழ்
நாடும்வேதாகமத்தின் கேள்வியோர் 49

நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார்தர்மம்நிலைநாட்டினார் நித்தியம்
சுபஜெயமங்களத்தை சூட்டினார் 50

சூட்டியவர்க்கருளைத் தீட்டியவேலவர்மேல்ச்
சொன்ன கவியெங்கும் பிரகாசம்-ஓகோ
மன்னவருமக்கெந்த தேசம் 51

தேசமென்பதுராமன் சேதுபந்தனஞ்செய்த
சீமான்திருப்புல்லாணி தானடி-தங்கம்
ராமசாமியென்பது காணடி 52

காணடிக்கடிகந்த நாதன்தனைப்பணிய
நல்லதினங்களைப்பா'காணும்-அதைச்
சொல்லநாமிங்கேவர வேணும் 53

சொல்லக்கேள் சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்குத் தானடி-வந்தால்
பாதகங்களகன்றுபோமடி 54

பாதகந்தன்னைப் பரிகாசமேசெய்யுங்கந்தன்
பாதந்தனைப்பணிய வேணும்-நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும் 55

காணுந்தவமிகுந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் யோகண்டி-நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகண்டி 56

வாகன்செந்தூரானென்றால் வையாபுரிபழனி
மாமலைமேலிருப்ப தாரு-நல்ல
சாமிமலைக்குகந்த தாரு 57

சாமிமலைமுதலாய் பூமிதனிலுமுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி-மேவி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி 58

ஆண்டிக்கிவ்வுலகமெல்லாம் வேண்டியபதியென்றால்
அத்தலங்களிலெது காணும் இவர்
சித்தம்வைத் திருப்பதெங்கோணும் 59

சித்தம்வைத்திருப்பது முத்தரெனுமடியார்
சிந்தையை விட்டகல மாட்டார்-மாயன்
செந்திருவாழ்கதிரை நாட்டார் 60

நாட்டாரடியவர்மேல் நாட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில்ச் செல்வாரோ-நாமும்
கேட்டவரங்கள் தரு வாரோ 61

கேட்டவரந்தருவார் நாட்டுபதியில்சொல்வார்
கேசவன்தன்மருக ஞர்க்கே-யெண்ணி
வாசமாய்நம்பிநடக் தோர்க்கே 62

வாசமுடனேகதி ரேசனைத்தொழுதிட
வாருமையாபுகழ லாலி-யினி
கூறும்ஜெயமங்களவாழி 63

வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாழியடியவர்கள் வாழி-யெங்கள்
மேழிக்கொடிக்குலமும் வாழி. 64

கதிர்காமத்து ஏசல்
முற்றற்று.

உ

சிவமயம்.

கதிர்காமக்கும்மி.

———:*:———

சீர்வளரும்பெற்ற குயில்கூவும்நல்ல
தென்கதிர்காம மதில்மேவும்
ஆறுமுகன்கதி ரேசனுமேலெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனுமே. 1

மங்களம்சேரும் கும்மிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாமே
சிங்கத்திலேறிய பூரணியேயெங்கன்
செந்தமிழ்க்கேயருள் நாரணியே. 2

சுந்தரநீரணி ஆறுமுகன்மீதில்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகன்
சிந்தைக்கிசைந்தவளை வாழ்த்திக்கவி
செப்பும்புலவர் களைப்போற்றி. 3

சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையு மேசிறக்க
வந்துதவிசெய்ய வேணுமம்மாநாளும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா. 4

கந்தன்கதிர்காம வேலனேபுவி
கார்க்குமறைமுத லோலனே
யெந்தனுக்கேயனு கூலனேதொழு
தேத்திப்பணியவும் சீலனே. 5

மங்கையரெல்லோரும் வாருங்கடியிந்த
மாணிக்ககெங்கைநீ ராடுங்கடி
சிங்காரமாய்ப்பணி பூட்டிக்கொண்டுமுகம்
சிறந்தகுங்குமம் தீட்டுங்கடி. 6

கூந்தலுக்கேமலர் மாலைகட்டிநல்ல
கோலவர்ணப்பட்டுச் சேலைகட்டி
சேர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக் கொண்டாடுங்கடி. 7

ஐயமில்லாமலே நாடிவந்தயிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த
சேயிழைமார்களே வாருங்கடிகவிச்
சிற்சபைசொல்லுறேன் கேளுங்கடி. 8

ஓதியசெந்தமிழ்ப் பாடவேயிந்த
ஊர்வளஞ்சொல்லிக் கொண்டாடவே
யேதுபிழைக ளிருந்தாலும்சுவாமி
ஏழைக்கிரங்கி யென்னையாளும். 9

ஆறுமுகனென்று பேருடையானென்னை
யாளும்கதிர்காமத் தூருடையான்
சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றிய காலுடையான் 10

சத்திக்குகந்த மகன்தானேயிவர்
தந்தையுமுக்கண் சிவன்தானே
யெத்திசையும்புகழ் மால்மருகன்றன்னை
யேத்திக்கொண்டாடலாம் வாருங்கடி. 11

வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ்சந் தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேத்தினர்சென்னல்
அள்ளியவலெங்கும் தூத்தினர். 12

சென்னல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
சன்னல்தழைத்தெங்கும் மூத்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளர்ந்தோனும். 13

மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னை
மரப்பிலாவுந் தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில்மயில் கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும். 14

கானகத்தில்மயில் ரொம்பவடிபுலி
கரடிமான்மரைக் கும்பலடி
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும். 15

மாணிக்ககெங்கையா ரோடுவதும்நிதம்
மாதவர்வந்துநீ ராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே. 16

வீதியலங்கார மெத்தவடியிதில்
மேவுஞ்சனங்களும் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங்கோவில்
சூழ்ந்ததிருமதில் தாவரமும். கஎ
குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
கொட்டியமேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூட்டமும்வள்ளி
யம்மைதெய்வானைக்கி மாடமும். கஅ
என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
லிலங்கியவலங் காரத்தை
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்தானிகராவதும் சிங்களவர். ககூ
நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னனரசுக் குருத்தவர்கள்விட்ட
மாணியங்கள்ரொம்பப் பெற்றவர்கள். உ0
புத்துமதத்திலுகந்தவர்கள் கந்தன்
பூசையில்மித்த மிகுந்தவர்கள்
நித்தமும்சிங்களர் கூடுவதுமிவர்
நேர்ந்துபணிந்து கொண்டாடுவதும். உக
தெய்வானைக்கேத்த மலர்கள்கொய்வார்
தேசசன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமையைச்சொல்ல நல்லதடி. உஉ
யெண்டிசைதோறும் புகழ்வாசன்கொழும்
பெங்கும்சிறந்த கதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கொடி வீரனடி. உ௩
செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டி அந்த
தென்னிலங்காபுரி மெத்தவண்டி
சிங்காரமாகிய வேலனடிஅவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி. உச
சிறப்பைச்சொன்னவ ரேகாணும்அந்த
தென்னிலங்கை யென்பதுதானும்

யிருப்பதெந்தவிடங்காணும் அதற்
கெப்படிப்போனல் தடங்தோணும். ௨௫
கண்டிகொழும்பு மிருப்தெங்கேயிந்த
கார்க்கடல்மத்தியில்த் தீவுமிங்கே
உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையைச்சொல்லவும் வேணுமையா. ௨௬
சொல்லுகிறேன்கேளடி மின்னாள்தேவர்
சொன்னசபதத்தால் மூன்றுலே
வெல்லவேமாருதம் விசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே. ௨௭
வந்துவிழுந்த யிடமாச்சுயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும். ௨௮
ஏழுசுற்றுக்கோட்டையாக்கியே யிதற்
கிலங்கையென்னும் பேர்தாக்கியே
ஆளமென்றுமன நற்பாலேசொல்லி
ஆண்டகுபேரனுக் கிப்பாலே. ௨௯
ராணுவததோடே செயம்பூண்டான்மன்னன்
ராவணன்தென்னிலங்கை யாண்டான்
போனதிரையதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே. ௩௦
கண்டுசிறையெடுத் தேடிவந்தான்ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான
நின்றுகடலேகண் டேதிகைத்தான்அந்த
நேரம்வருணனை யு மழைத்தான். ௩௧
சீதையினலே மனமுகந்துராமன்
தெர்ப்பசயன மதிலிருந்து
ஆதிசேதுவெனப் பேர்பொருந்திக்கன்னி
யாகுமரியெல்லே கண்டறுதி. ௩௨
பரப்பிலேபத்து யோசனையாய்கவிப்
படைமலேகொண்ட தற்கிணையாய்
உரத்துயோசனே நூறுமட்டும்அனே
உண்டுபண்ணிலங்கைக் கோட்டைமட்டும். ௩௩

நடந்துலங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபுன்பு
அடர்ந்தராட்சதக் கும்பழியதிரு
வணைசிதறுண்டு தான்மறைய. ௩௪
பின்னுலிலங்கையைச் சீருக்கித்தவப்
பெருமையால் கொஞ்சம்பேருக்கி
அன்னுள்விபீஷண னுண்டுவிட்டார்பின்பு
அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார். ௩௫
நாட்டமுள்ள கயல்க் கண்ணுளேலங்கை
நகரம்நாள்சென்று பின்னுலே
கோட்டையழிந்து கடலாச்சுஇது
கொஞ்சமாய்த் தீவிங்கே துணையாச்சு. ௩௬
அப்பாலித்தீவு சீரில்லாமல்யிதில்
ஆளவொருவரு மில்லாமல்
ஒப்பாதகாடு மலையாச்சிபெரி
யோர்களுலாவு மிடமாச்சு. ௩௭
நயமிருந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்ததின் பிற்பாடு
யியக்கரென்றொரு ராட்சதனும்இதில்
யிருந்தரசிட்டான் பேச்சவனும். ௩௮
நத்தியேநசர் சிலர்காலம்மேல்
நாட்டையுமாண்டு வருங்காலம்
புத்தரும்வந்திதில் நாடினர்சிலர்
புத்தர்மதத்தைக் கொண்டாடினர். ௩௯
திசைபுகழ்வங்க தேசாதிராசன்
சிங்கவாகுபெத்த ஞாயாதி
விசயராசனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி, ௪0
தலைமன்னுரென்று பேட்டைக்கட்டிராசன்
தம்பன்னைநாளென்று கோட்டைகட்டி
சிலைவளிமையைக் கொண்டாடககண்டு
தென்னணியக்சா மகள்கூட ௪௧
செப்பமுடனிதை யாள்வந்தான்வங்க
தேசத்ததிபன் மகனிவன்தான்

அப்பாலித்தீவுக் கரசாடிவந்து
ஆண்டவர்கள் வெகுபேர்களடி. ௪௨
வங்காளர்சிங்காளா வெள்ளாளர்யிந்து
மதசமயத்து வல்லாளர்
யிங்கேவந்துகுடி யேறினார்யிதர்க்
கிசைந்தாசரு மீறினர். ௪௩
சிங்களப்பாஷையு மேலாச்சுயிதில்
சிவசமயமு முண்டாச்சு
மங்கையரேசில ராசாக்கள்புத்து
மதசமயத்தை மேலாக்க. ௪௪
பாண்டிசோழதேசத் தீரர்களும்வந்து
பட்டமாண்டமுடி வீரர்களும்
வேண்டியகோட்டைகள் கட்டிக்கொண்டார்மதம்
வேறுசெய்யசண்டை யிட்டுங்கொண்டார். ௪௫
பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
பாருலகத்திலே பேருச்சு
மேவும்சிவஸ்தல மெத்தவுண்டுயந்த
விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு. ௪௬
உன்னிதமான மலையுமுண்டுயிதி
லோங்கும்சிவனடி பாதமுண்டு
முன்னீஸ்வரம்வெகு முக்கியமாய்அதில்
மூலகணேசன் சிலாக்கியமாம். ௪௭
கேட்டவர்க்கேயனு கூலமாம்திருக்
கேஸ்புரமென்றொரு தானமாம்
நாட்டமுள்ளநகு லேஸ்புரமாம்சிவ
நாதனுகந்த கோணேஸ்புரமாம். ௪௮
தண்டேஸ்புரம்வெகு தகுதியாம்ஐயன்
சாத்தாக்கோவிலொரு பகுதியாம்
உண்டிசைமொய்த்த குமரபுரம்புக
ளிலங்கும்சந்திரசே கரபுரம். ௪௯
கண்டலர்மொய்த்த பாவிட்டபுரம்ராச
கர்த்தருல்செய்த தனைகபுரம்
தொண்டர்துதிக்கும் தலங்களிதாம்யின்னம்
தோணுதிருப்ப தனேகமதாம். ௫0

ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடி முன்னே
ராமனுதனுலமைந்ததடி
பூமிக்குருத்தான மன்னர்மெத்தபட்டம்
பூண்டரசிட்ட நகரமெத்த ௫௧
கண்டியென்றுங்கோட்டைக் காடிதென்றுநல்ல
கழனிநீர்கொழும் பூரிதென்றும்
அண்டியவரெல்லாம் கட்டடமாம்கோட்டை
அனுராசபுர பட்டணமாம். ௫௨
முத்துச்சலாவத் துறையுமுண்டுகடல்
முழுகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தினபுரியென்று ஊருமுண்டுஅதில்
ரெத்தினமணிகள் விளைவதுண்டு. ௫௩
பன்னகாமமதும் பறைநாடாம்யாழ்ப்
பாணம்பகுதி வெருநாடாம்
இன்னமுருக்கு தனேகமெல்லையிப்ப
யெனக்குச்சொல்லச் சமையமில்லை. ௫௪
கண்டவிடமெல்லா மூராச்சிகோவில்
கட்டியகட்டடம் பேராச்சு
திண்டுமுண்டாப்பளி கொண்டார்கள்நல்ல
சிங்களரோடர காண்டார்கள். ௫௫
கண்டியையாண்டிடும் வீரதுங்கன்யிதில்
கட்சிவிக்ரம ராஜசிங்கன்
தண்டிகையேறிய சூரர்களும்யிவன்
தலைமுறைவரை ராஜர்களும் ௫௬
தொண்ணூற்தாறுமுடி மன்னரடிஅதைச்
சொல்லுஞ்சரித்திர மின்னமடி
விண்ணவர்மெய்த்திடு மானகரில்யிதில்
மேவியரசிட்ட பேரவரில். ௫௭
கண்டியரசனும் பின்னுமேலஅவன்
கட்டடம்காணலாம் கண்ணாலே
வண்டனதியாய்க்காரனடி அவன்
வமிஷம்நாய்க்க ராஜனடி. ௫௮
அதற்குமுந்திய ராஜர்கொடுக்கட்டி
ஆண்டவிடமெல்லாம் சீருகெட்டு

மதிப்பதாக்கிடந் தோணுமலேகாடு
மண்டியிருப்பதும் தானுமே. ௫௯
இங்கிர்தன்வீரத்தில் சூரசிங்கன்யிந்த
இலங்கைநாடெல்லாம் ராஜசிங்கன்
சங்கையுடனரசாளேயிலேசீமை
தன்னிலிருந்தந்த வேளேயிலே. ௬0
சிங்கரேப்பந்தலில் பறங்கியேயிந்த
தீவுக்குள்ளேவந்து யிறங்கியேயிந்த
தங்கச்சிகரம் தனைவகுத்துப்புத்தர்
தாவுங்கழனித் திசையடுத்து ௬௧
கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டியதைக்
கொழும்பனென்றுசொல்லி பேர்நாட்டி
வேட்டெழுப்பிக்காலிக் கோட்டைகட்டிநல்ல
விஸ்தாரமாத்திர பேட்டைகட்டி ௬௨
தொட்டதிருக்கோண மாமலேயும்அந்த
முறைமுகங்களேயும் யாண்டதையும்
ஒட்டாமல்த்தள்ளி விரைவாகிவந்து
உலர்ந்தாக்காற ருசாராக. ௬௩
ஆண்டுசிலகாலம் விட்டார்கள்பின்பு
ஆங்கிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலேநிறுத்தயிந்த
மேதினியையெல்லாம் சீர்த்திருத்த ௬௪
கும்பமுனியார்வந்து ஒட்டிக்கொண்டார்யிந்த
கொழும்புபேட்டையைக் கட்டிகொண்டார்
வம்பானக ட்டையும் வெற்றிஉற்றூர்கோடு
வங்காளகச்சேரி கடடஉற்றூர் ௬௫
கண்டிசரசனேச் கெடுத்திட்டாபெருங்
கள்ளர்களேச்சுட்டு யருத்திட்டார்
வண்டிக்கிறோட்டுக ளுண்டுபண்ணியதில்
மாகாணங்களாய்த் துண்டுபண்ணி ௬௬
துறைமுகங்களே நேராக்கிகாப்பித்
தோட்டங்களேயெல்லாம் சீராக்கி
நிறையிந்தியாச் சனங்களும்ரேகு
நிறைந்ததீர்வைப் பணங்களும். ௬௭

மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
　　விளம்பும்ஆபீசை முந்திவைத்தார்
என்னசொல்லுவேனடி மின்னரசேயிந்த
　　இங்கிலீஷ்காரர் தன்னரசை, ௬௮

பூட்டிறெயிலேயும் நடத்தினர்யெங்கும்
　　புகைவிளக்கையும் பொருத்தினர்
தாஷ்டிகமான கடலைக்கூட
　　தடுத்தணைகட்டி யேநெருக்கி. ௬௯

தண்டவாளச்சூடசம் வைத்தாரேமலைத்
　　தண்ணீரைவாவென் றழைத்தாரே
மண்டலத்தில்புகழ் பேற்றதடிகப்பல்
　　வாறதனேகமாய் நித்தமடி. ௭0

தண்டமிழ்சேர்புவி பெத்தவளாம்யிந்தியா
　　சக்கரவாத்திப் பட்டம்பெற்றவளாம்
லண்டனரசாட்சியைச் செலுத்துமமகா
　　ராணிகட்டளைப் படிநடந்தும், ௭௧

இங்கிலீஷகாரரா லேயல்லம்ம
　　இந்தியாவும்லெங்கைத் தீவுமல்லோ
கங்கையும்சிங்காரமுண்டாச்சு வெகு
　　தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு. ௭௨

பூமியில்கள்ளர் பயம்போச்சுவெகு
　　புத்தியும்விதைதையு மேலாச்சு
சாமிகதிரேசன்தன்னருளால் ஒரு
　　தாழ்வொன்றுமில்லையே தோழிப்பெண்ணே. ௭௩

தாழ்வில்லாத்தண்மை யுடன்வாழும்கவி
　　சாற்றியமன்னவ ரேகேளும்
ஆளுங்கதிரேச ஸ்த்தலத்தில்வந்த
　　ஆரம்பத்தின்கதை சொல்லுமையா. ௭௪

ஆரம்பமென்ன புராணத்திலேகதை
　　அறிந்தமட்டுமின் னேரத்திலே
கூறவுங்கேளுங்கோ பெண்ணுரேவர்ன
　　கோலவிருக்கயல்க் கண்ணுரே. ௭௫

அண்டமெல்லாமொரு தகத்திலேகட்டி
　　ஆண்டகிரேயுதா யுகத்திலே

கொண்டரசாட்சியைச் செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியெ கொளுத்தியே. எசு

பாரவிணையாளுக் கொஞ்சாதவெரு
படைப்பெருக்கத்துக் கஞ்சாத
வீரப்பிரதாப மிகப்பூண்டமன்னன்
வீரமயேந்திர புரமாண்ட எஎ

வாசமுள்ளசூர னாணையிலேஅவன்
வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசறைவீடு மீதில்தாண்டிகந்தன்
படைப்பெருக்க மிதில்த்தாண்டி. எஅ

குன்றெனும்சூரரைத் தூக்கினார்தேவர்
கோனுக்காசை யுண்டாக்கினர்
அன்றுமுதல்கந்தன் வாசமடியிதில்
அண்டர்களும் விசுவாசமடி. எகூ

காமன்மைத்னேனைத் தொண்டுபண்ணிகதிர்
காமமென்றபேரை யுண்டுபண்ணி
மாமுனிவோர்கள் கொண்டாடிவந்தகம்ம
வள்ளிமணாள னிவன்தாண்டி. அo

மன்னவரேகவி சொன்னவரேயிங்கே
வாருமையாசொல்லக் கேளுமையா
மின்னியவேலவ னரவாழ்த்தமுறை
விளங்கச்சொல்லும் பணிந்தேற்ற அக

விளங்கும்தீப தெரிசனமும்தவில்
மேளம்தவண்டை முரசினமும்
முளங்கும்சன்னதி முன்பாகச்சென்று
மூலஸ்தாணத்தைப் பாருங்கடி. அஉ

மூலஸ்தானந் தெரியாமேசபை
முன்ஸ்தலமண்டபம் தோணுமெ
சீலமிகுகந்தன் சன்னிதியிலிட்ட
திரைமறைப்பிங்கே யேதுக்கையா. அஈ

திரைமறைப்பு வளமைபடிகந்தன்
சேவடிகாண்ப தருமையடி
முறைதெரியாத மானிடர்க்குகந்தன்
முன்மணிவாசலுந் தோணாது. அச

முன்மணிவாசல் கடக்கவேணுமேசுவாமி
மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன்தனை
நானறியவகை சொல்லுமையா. ௮௫

காணுமறிந்தது மில்லையடிசொன்ன
நம்புவையோயெந்தன் சொல்லையடி
தேனருந்தவழி தோணட்டல்கந்தன்
சேருவைகாணமுடியாது. ௮௬

சேருவைகாண முடியாவிட்டாலிந்தச்
சிங்களவரெனும் ஸ்தானிகர்கள்
ஆறுமுகவ னறியாமல்நிதம்
ஆருக்கலங்காரம் செய்வார்கள். ௮௭

ஆருக்கென்றால்வர்னப் பேழையொன்று அதற்
கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேற்றிவீதி
பவனிவாரது முண்டுமடி. ௮௮

பவனிவந்திடும் வேளையதுயென்னை
பாவிணையாகவே சமைந்தது
அவனியெல்லாம் புகழ்ந்தேற்றவேளைக்
கருள்நிறைந்தது மெவ்விதங்காண். ௮௯

அருள்நிறைந்து சமைந்தவித்தைவெகு
அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குறிவறிந்து தலக்காட்டால்கண்டு
கொள்ளமுடியாது வள்ளலையே. ௯௰

வள்ளலுசந்திடும் கோவிலுக்குமுழு
வச்சிரத்தட்டோடு போடாமல்
தெள்ளியமாமணி மேடையெல்லாம்செய்து
செப்போடிட்டது மேதுக்கையா. ௯௧

செப்போடல்லவே தோழியரேயிது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்குயிது
செப்போடாகவே தோணுமடி. ௯௨

செப்போடிட்டதை மாத்தியிலேயின்னும்
சீர்த்திருத்திவரி சாத்தையிலே
அப்போதங்குள்ளே மூலஸ்தானத்தை
அறிந்துகொள்ளாரோ சொல்லுமையா. ௯௩

அறிந்தனுண்டைய னுத்தரவால்பண்ணி
ராண்டுக்கொருதா மாத்தினவர்
உரியசுத்தமவு னங்கொண்டுசமர்
துகர்ந்தடைந்தவர் கோடியுண்டு ௯௪

துகர்ந்தடைந்தவர் கோடியுண்டு
கொலுவில்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைமேல்கந்தன்
சேருவைச்சேகர மெப்படிகாண். ௯௫

சேகரமான மலைகளுண்டுசத்தி
திரண்டுருண்ட வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடிமலைக்
கிசைந்துபோனவரில்லையடி. ௯௬

போனவரந்த மலைவளத்தைச்சொல்லி
புகழக்கேட்டே னதின்விதத்தை
ஆனலவரெப்படிப் போனர்போக
லாகாதென்றெவ்விதம் சொல்லுவீர்காண். ௯௭

ஆகாதென்றது மெய்தாண்டிமுரு
கையனுத்தரவி னல்தாண்டி
யேகினலந்தக் கதிர்மலைக்கிவழி
யிசையத்தோணு மிருள்விலக்கி. ௯௮

யிசையும்நல்ல வழியுமென்றீர்முன்னே
யேகமிருகசஞ் சாரமென்றீர்
திசைக்கிச்சொல்லாமல் தட்டிடுமோகண்டு
சேரும்படிவழி விட்டிடுமோ. ௯௯

விட்டிடாதது மெய்யேதர்க்கிகதிர்
வேலவனுத்தர வானதர்க்கே
தட்டுப்படாது மிருகமெல்லாம்வனம்
தாண்டியேயேறி நடந்திடவாம். ௧00

நடந்துகாணுவ தெந்தமலைசுந்த
 நாதனிருப்பது மெந்தமலை
அடர்ந்தமேளத் தொனிகளுண்டேயங்கே
 அண்டர்கள்கூட்ட மதிகமுண்டோ ௧௦௧

அண்டர்கள்கூட்டமதிகமுண்டு அப்பால்
 ஆறுமுகன்சபை யங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாத மானிடர்க்குசபை
 காணவுந்தோணுது தோழிப்பெண்ணே. ௧௦௨

தோணுதென்றது மெய்யவரும்பிருள்
 சூழ்ந்தவனங்கள் கடந்தவரும்
காணுதமாமலைக் கேறினவாசபை
 கண்டுதொழாமல் வருவாரோ. ௧௦௩

கண்டுதொழுவ தெல்லாமலையும்யெங்கள்
 கந்தன்கனக சபைமலையே
தொண்டரல்லால்கண்ட பேருமில்லை அங்கே
 துடிவயிரவன் காவலடி. ௧௦௪

காவல்கொண்டமலைச் சார்பினிலேயெங்கள்
 கர்த்தன்பவனிப் பதியினிலே
மேவும்சமரதொன் றிருக்கிறதேயதை
 விளங்கச்சொல்லு மெனக்குமதை. ௧௦௫

சொல்லுவேன்கேளு திரைகடந்தபோகத்
 துரியாதீதத் துரைகடந்த
நல்லமுத்துலிங்க சுவாமிக்கடிமுந்தி
 ராசரால்கட்டிய கோவிலடி. ௧௦௬

கட்டியகோவில்ச் சிறந்ததிலேகதிர்
 காமமசிவஸ்தல மானதிலே
முட்டிவணங்கி முனையதிலெங்கிற
 முழக்கமேதிங்கே சொல்லுமையா. ௧௦௭

முழக்கமான நபிவரத்தில்வந்து
 முத்தியடைந்தன ரித்தலத்தில்
வழக்கமாமுசி லீன்கள்நிதம்
 வந்துவணங்குந்தீன் சுத்தமடி. ௧௦௮

நினதுகூறிய மாபதியில்நல்ல
சித்திரவேலவன்சன்னதியில்
தானமும்தர்மமும் செய்யவென்று அன்ன
சத்திரம்கட்டின தார்களும், ௧௦௯

சட்டியமாமடம் செட்டியடிதர்மம்
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை யிட்டமைத்தார்புகழு
சந்ததர்மம் மடம்சமைத்தார். ௧௧௦

உசர்ந்ததர்மம் மிகுத்தோர்கள்செல்வ
மோங்கும்வசிய குலத்தார்கள்
இசைந்துவந்த வரைத்தேடியன்னம்
ஈவதுமுண்டோ மனம்நாடி. ௧௧௧

நாடியதர்மம் மிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலேயிவ
ராண்டுக்கொருதரம் வாரதுண்டு. ௧௧௨

வாறதுண்டுநக ரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரிந்நகரில்
ஆறுமுகன்கதி ரேசனுக்கிது
ஆடித்திருவிழா முக்கியமே. ௧௧௩

முக்கியமாய்க்கதிர் காமத்தாலேசுற்றி
முக்கோண சக்கரவீதியிலே
சக்கரபாணி மருகனெனும்கந்த
சாமிதிருவிழாக் கூட்டமடி. ௧௧௪

கூட்டமும்யாட்டமும் கொண்டாடும்குடை
கொடிவிருதுகள் நின்றாடும்
நாட்டமுடைய திருகாவில்நிதம்
நடிக்குகின்ற வளவையென்ன. ௧௧௫

வளமேவேழத்தின் மேலிருந்துகந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து
சகேதவங்கி வீதியிலேவரும்
கந்தன்பவனியைப் பாருங்கடி ௧௧௬

கந்தனுக்கேர்த்த திருநாளிவிந்தக்
காசினியோரும் வரும்நாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேருமேலேறுவ தென்றைக்கையா ௧௧௭

தேருமேலேறும் வளமையில்லைசித்திர
தேருமிழுப்பது மிங்கேயில்லை
நேருடன்தண்டிகை மீதேறிசுவாமி
நீராறப்பானதைப் பாருங்கடி. ௧௧௮

நீராறப்பென்றதும் தோன்றலையோயிப்போ
நீர்சொன்னபாஷை விளங்கிலையோ
தேருமின்றூட்டு வளமைகளோயிதைச்
சீருடனேசொல்ல வேணுமையா. ௧௧௯

சீருள்ளமாணிக்க கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்பயிலே
நேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
நீறரைப்பெனென்பதும் மெய்தாண்டி. ௧௨௦

மெய்யான ஆறு முகவரெனும்சுவாமி
மேவியவள்ளி தெய்வானையனும்
தையலர்மேவும் கதிர்காமந்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ. ௧௨௧

முத்தியுண்டுகினைத் தாலுமடிதவ
முத்தார்புகழ்கதிர் காமம்வந்தால்
சித்தியுமுத்தியு முண்டாகும்பணி
சேராதருள்வார் முருகேசன். ௧௨௨

கேசவன்தன்னரு மைக்குரியவள்ளிக்
கிசைந்தகர்தன் புகழ்புரிய
வாசமிருந்த தமிழதனைற்சொன்ன
மன்னவரே யுமக்கெந்தவூரு. ௧௨௫

மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மானகரம் திருப்புல்லாணி
நன்னயமாகிய ஊர்தாண்டிதங்கம்
ராமசாமியென்றன் பேர்தாண்டி. ௧௨௬

பேரையும்ஊரையு மேபுகழ்ந்துசொன்ன
  பேர்பெற்றமானகர் மீதிருந்து
தாருலவுங்கதிர் காமத்துக்கேரும்
  தானிங்கேவந்த வயணமென்னை ௧௨௫

வந்துகொழும்புத னில்ச்சிறந்துசெந்து
  வாவம்தாச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணாலேகண்டு
  கைதொழுதேத்தவும் வந்தேனடி. ௧௨௬

கைதொருதேற்றிய மெய்வாசன்நம்ம
  கந்தன்கதிரை முருகேசன்
தெய்வயானைவள்ளி மணாளனுமேலினி
  செந்தமிழால்துதி சொல்லுமையா. ௧௨௭

சொல்லசொல்லிக் கேட்டவர்க்குவரும்
  துன்மமகற்று மிப்பாடவர்க்கும்
தில்லையெல்லைவல்லத் தாண்டவத்தாள்வாலை
  தேவிசிவகாமி யின்தவத்தால் ௧௨௮

அருள்பொருந்தியே பூவாசன்வள்ளி
  யம்மைதெய்வானைக் கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
  தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம். ௧௨௯

தீராதநோய்களை தீர்த்தவண்டிசுவாமி
  சித்தம்வைத்துநம்மைக் காத்தவண்டி
நாரணனுக்கு மருகனிவன்ஜெக
  நாதன்செந்தூரு முருகனிவன். ௧௩௦

தேவசேனாதி பதிதாண்டிகூவும்
  சித்திரச்சேவல்க் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சன்னதியில்நின்று
  மூழங்கக்கும்மி யடியுங்கடி. ௧௩௧

சிம்மாசனத்தி லிருந்தவரைதளம்
  சேர்கதிர்காம முகந்தவரை
யிம்மாநிலத்தர் போற்றியே அவ
  ரெண்ணியந்தபடி நேர்த்தியே. ௧௩௨

செலுத்தும்வேடிக்கை பாருங்கடிகந்தன்
 தீபதெரிசனம் பாருங்கடி
தலத்தில்முக்கியம் மெத்தவடிகந்த
 சாமிக்கிசிங்காரம் நித்தமடி. ௧௱௩

முப்பத்துமுக்கோடி தேவருக்கும்நல்ல
 மூவருக்கும்புவி யாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம் தானவர்க்கும்நல்ல
 நாவலர்க்கும்திசை காவலர்க்கும் ௧௱௪

சிங்காரக்கும்மி தமிழ்ச்சிறக்கும்நம்ம
 செங்கைவேலன் கதிரேசனுக்கும்
மங்கையர்வள்ளி தெய்வானையர்க்கும்ஜெப
 மங்களம்வாழி மிகவாழி, ௧௱௫

சித்திரவேலா யுதம்வாழிகந்தன்
 சேவல்மயிலு மிகவாழி
சத்தியருள்கந்தன் சன்னதியில்புகழ்
 சாமியிடும்பனும் வாழியதாம் ௧௱௬

கதிர்காமக்கும்மி

முற்றிற்று.

—(-*-)—

உ

சிவமயம்.

மங்களம்.

ஆதிபராபுரஞ் சோதிக்கும் அபிராமிக்கும்
ஜெயமங்களம்.

மாதுவள்ளி தெய்வானைக்கும் வடிவேலர்க்கும்
சுபமங்களம்

திருவுக்கும் திருமாலுக்கும் தெய்வதேவர்க்கும்
ஜெயமங்களம்

குருவுக்கும்குமரேசர்க்கும் குறமாதுக்கும்
சுபமங்களம்

மாலருள்பிர்ம தேவர்க்கும் கலைமாதுக்கும்
ஜெயமங்களம்

அலைசூழ்கதிர் காமம்வாழி முருகையர்க்கும்
சுபமங்களம்

செந்தமிழ்க்கவி யாளர்க்கும் புவியாளர்க்கும்
ஜெயமங்களம்

கந்தனாறு முகன்வேல் முருகையர்க்கு
சுபமங்களம்.

மங்களம்-முற்றிற்று.